**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 -ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2053, ஸ்ரீ சோபகிருது வருடம், மார்கழி மாதம் 16 - ம் நாள்**
**இ.ம.எண். 1/2021 இன் மு.வ.எண். 41/2020**

1. மணி (இறப்பு)
2. கருப்பாயி
3. ராஜாங்கம்
4. கருப்பணன்
5. முத்துராஜா
6. பூமிநாதன் (இறப்பு)
7. வீரமாகாளி
8. தேவி
9. ராஜேஸ்வரி ... மனுதாரர்கள் / Proposed 2 முதல் 9 வரை எதிர்மனுதாரர்கள் /Proposed 2 முதல் 9 வரை வாதிகள்

... எதிர் ...

1. காந்திமதி
2. காமாட்சி
3. சிறப்பு தாசில்தார், நில எடுப்பு, மானாமதுரை.
4. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை ...........எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

*****

இம்மனு என்முன்பு 14.12.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது 1,6 மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில், 2 முதல் 5, 7, 8 9 மனுதாரர்கள் / சேர்க்கப்பட வேண்டிய 2 முதல் 5, 7, 8 9 வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சி.வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.எஸ்.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், 2 -ம் எதிர்மனுதாரர்/2 -ம் பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.பார்த்தசாரதி, திருமதி.எம்.சங்கீதா, திரு.வி.சரவணபாண்டியன் ஆகியோர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.எஸ்சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

2 முதல் 9 மனுதாரர்களை, அசல்வழக்கில் 2 முதல் 9 வாதிகளாக சேர்த்துக்கொண்டு, அசல்வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:**

வாதி கடந்த 03.05.2021ம் தேதி இறந்துவிட்டார். அவருக்கு 2 முதல் 6 மனுதாரர்கள்

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.02 16:07:43 +0530

வாரிசுகளாக உள்ளார்கள். அசல் மனு நிலுவையில் இருக்கும் போது 6 ம் மனுதாரர் இறந்து விட்டார். பெண்மக்களை சேர்க்கவில்லை என கட்சி செய்யப்பட்டுள்ளதால், அவர்கள் மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளளார்கள். மேற்படி மனுதாரர்களை வாதிகளாக சேர்த்துக் கொண்டு வழக்கை நடத்த அவசியமாக உள்ளது.

**2.** <u>1 -ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:</u>

மனுவில் கூறியுள்ள விசயங்கள் மறுக்கப்படுகிறது. மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ.எண்.8/2008 ல் இறந்து போன மணி பி.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கு விவரங்கள் மணிக்கு நன்கு தெரியும் என்ற நிலையில் இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. இவ்வழக்கு காலாவதி தோசத்தால் தடைபட்டுள்ள நிலையில் வாரிசுகள் வழக்கை மேல்நடத்த எந்த முகாந்திரமும் இல்லை. பெண்மக்கள் ஒருவரையும் சேர்க்கவில்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி என்னவென்றால் மனுதாரர்கள் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவானது இறந்து போன வாதியின் வாரிசுகளை, அசல்வழக்கில் சேர்க்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மனுவை அனுமதிக்கக் கோரி வாதிடப்பட்டது. இவ்வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வாதியின் வாரிசுகள் வழக்கை மேல்நடத்த இயலாது என்பதால் மனுவை தள்ளுபடி செய்யக் கோரி வாதிடப்பட்டது. இவ்வழக்கில் இறந்து போன வாதியின் பெண்மக்கள் வாரிசாக சேர்க்கப்படவில்லை என கட்சி செய்யப்பட்டு, அவர்களையும் சேர்த்து மனுவை திருத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 -ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.02 16:07:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

<u>**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.02 16:08:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.